சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 215/2022

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு. திருநாவுக்கரசு | நாள் 11.09.2025 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

**மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் தற்பொழுது சதுரங்கப்பட்டிணம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கில் எங்கள் காவல் நிலைய அலுவலரை சாட்சியாக விசாரித்து ஆவணங்கள் தாக்கல் செய்ய அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களான மனுதாரரின் விபத்துப் பதிவேடு நகல், டிஎன் 19 பிஎக்ஸ் 4044 என்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் குற்ற எண்.287/2021 வழக்கில் குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்கிறேன். **அவை முறையே சா.சா.ஆ.1 முதல் 3.**

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

2) குற்ற வழக்கு நிலுவையில் உள்ளதா, முடிவுற்றதா என்று எனக்குத் தெரியாது. சா.சா.ஆ.2 படி வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமமும், அந்த வாகனத்திற்கு முறையான காப்பீடும் உள்ளது என்றால் சரிதான்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில்குறுக்கு விசாரணை

3) மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றால் எனக்குத் தெரியாது.